# சீருடைப் பணியாளர் தேர்வு

## மாதிரி வினா – விடை

## பொது அறிவு

1. சரியாகப் பொருந்தியுள்ளவற்றைத் தேர்க.
   1. யாழ் - காற்றுக்கருவி
   2. குழல் - நரம்புக்கருவி
   3. முழவு - தோல் கருவி

   (a). 1, 2 (b). 2, 3 (c). 3 மட்டும் (d). அனைத்தும் சரி

2. பல்லவர்களது குடுமியான் மலைக் கல்வெட்டில் கீழ்க்கண்ட எந்த இசைக்கலைஞரைப் பற்றிய செய்தி காணப்படுகின்றது?

   (a). உருத்திராச்சாரியார் (b). சியாமா சாஸ்திரி (c). முத்துசாமி தீட்சிதர் (d). தியாகராஜர்

3. ஓவியக்கலைக்குச் சான்று பகரும் இடங்கள்.
   1. சித்தன்னவாசல் குகைகள்
   2. காஞ்சி கைலாசநாதர் கோயில்
   3. தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில்

   (a). 1, 2 (b). 2, 3 (c). 1 மட்டும் (d). அனைத்தும்

4. தமிழ்மொழி குறைந்தபட்சம் எத்தனை ஆண்டுகள் தொடர்ச்சியான வரலாற்றை உடையது?

   (a). 5500 (b). 2500 (c). 4500 (d). 3500

5. சங்க காலத்தமிழர்களின் சமூக நிலையை விளக்குவது

   (a). தொல்காப்பியத்தின் சொல்லதிகாரம் (b). தொல்காப்பியத்தின் எழுத்ததிகாரம்
   (c). தொல்காப்பியத்தின் பொருளதிகாரம் (d). சிலப்பதிகாரம்

6. கீழ்க்கண்டவற்றுள் சரியான கூற்றினைத் தேர்க.
   1. தமிழ்நாட்டின் மொத்த நிலப்பரப்பு 1,30,058 சதுர கிலோ மீட்டர்களாகும்.
   2. தமிழ்நாட்டின் நிலப்பரப்பு இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 4 சதவீதமாகும்.
   3. தமிழ்மொழி மாநிலத்தின் ஆட்சிமொழியாக 1958-ம் ஆண்டு ஜனவரி முதல் நடைமுறைக்கு வந்தது.

   (a). 1, 2 (b). 2, 3 (c). 1 மட்டும் (d). அனைத்தும் சரி

7. இந்திய மாநிலங்களில் பரப்பளவில் தமிழ்நாடு எத்தனையாவது இடத்தை வகிக்கின்றது?

   (a). 8-வது (b). 11-வது (c). 10-வது (d). 9-வது

8. தமிழ்நாட்டில் உள்ள பீடபூமிகள்.
   1. நீலகிரி பீடபூமி
   2. கோயம்புத்தூர் பீடபூமி
   3. மைசூர் பீடபூமி
   4. பாராமஹல் பீடபூமி

   (a) 1,2,3 (b) 2,3,4 (c) அனைத்தும் சரி (d) அனைத்தும் தவறு

9. எந்த மாதம் முதல் எந்த மாதம் வரை, வடகிழக்கு பருவக்காற்று மழைப்பொழிவு பெறும் மாதம்

   (a). ஜூன் - செப்டம்பர் (b). அக்டோபர் - டிசம்பர்

(c). மார்ச் - மே (d). டிசம்பர் - பிப்ரவரி

10. தமிழ்நாட்டில் நீலகிரி, ஆனைமலைச்சரிவுகளில் காணப்படும் காடுகள்?

(a). அயனமண்டல அகன்ற இலைக் காடுகள் (b). மலையகக் காடுகள்

(c). அயன மண்டல பசுமை மாறாக் காடுகள் (d). முட்புதர்க் காடுகள்

11. துசுக்-இ-பாபரி அல்லது பாபரின் நினைவுகள் அல்லது பாபர் நாமா என்று அழைக்கப்படும் பாபரின் சுயசரிதை எழுதப்பட்ட மொழி

(a). பாரசீகம் (b). துருக்கி (c). கிரேக்கம் (d). சம்ஸ்கிருதம்

12. ஹுமாயூன் ஆளுநராக இருந்த மாகாணம் எது?

(a). பர்கானா (b). மேவார் (c). பதக்ஷான் (d). மாளவம்

13. இணைக்கப்பட்டுள்ளற்றில் சரியானவற்றைத் தேர்க.

1. சௌசா போர் - கி.பி.1540 2. கன்னோசிப் போர் - கி.பி.1539

(a). 1 மட்டும் (b). 2 மட்டும் (c). இரண்டும் சரி (d). இரண்டும் தவறு

14. இணைக்கப்பட்டுள்ளவற்றில் சரியானவற்றைத் தேர்க.

1. கான்வா போர் - கி.பி. 1528 2. கோக்ரா போர் - கி.பி. 1527

3. சந்தேரி போர் - கி.பி.1529

(a). 1, 2 (b). 2, 3 (c). 1, 2, 3 (d). அனைத்தும் தவறு

15. பொருத்தப்பட்டவைகளில் சரியானவற்றைத் தேர்க.

1. திவானி-இ-ரசாலத் - வரவு மற்றும் செலவு பொறுப்பு

2. திவானி-இ-இன்சா - ராணுவ பொறுப்பு

3. திவானி-இ-அரிஷ் - வெளியுறவு மற்றும் தூதரகப் பொறுப்பு

4. திவானி-இ-விசாரத் - அரசு ஆணைகள் மற்றும் கடித பொறுப்பு

(a). 1,3 (b). 3, 4 (c). அனைத்தும் தவறு (d).அனைத்தும் சரி

16. கீழ்க்கண்டவற்றுள் எது/ எவை சரி?

1. இராமாயணம் மற்றும் மகாபாரதத்தினை பாரசீக மொழியில் மொழிபெயர்த்தவர் ராஜா தோடர்மால் ஆவார்.

2. பாகவத புராணத்தை பாரசீக மொழியில் மொழிபெயர்த்தவர் அபுல் பைசி ஆவார்.

3. அபுல் பாசல், அயினி அக்பரி மற்றும் அக்பர் நாமா போன்ற வரலாற்றுப் புகழ்மிக்க நூல்களை எழுதினார்.

(a). 1, 2 (b). 2, 3 (c). 3 மட்டும் (d). அனைத்தும் சரி

17. பொருத்தப்பட்டவைகளில் எது எவை சரி?

1. புலந்தர்வாஜா - கி.பி. 1572

2. இபாதத் கானா - கி.பி. 1575

3. தவறுபடா ஆணை - கி.பி. 1579

4. தீன்-இலாஹி - கி.பி. 1582

(a). 1, 2, 3, 4 (b). 2, 3, 4 (c). அனைத்தும் தவறு (d). 1, 2, 4

18. பொருத்தப்பட்டவைகளில் எது / எவை சரியானவை?

1. பீஜப்பூர் சுல்தான் - அப்சல்கான்

2. ஔரங்கசீப் - செயிஷ்டகான்

3. சிவாஜி பேரரசு - சுயராஜ்ஜியம்
4. சிவாஜி முடிசூட்டுதல் - கி.பி.1675

(a). 2, 3, 4 (b). 1, 2, 3 (c). அனைத்தும் சரி (d).அனைத்தும் தவறு

19. சிவாஜியின் அமைச்சரவையில் 'சுமந்த்' என்பவர்

(a). பிரதம அமைச்சர் (b). காலமுறை அமைச்சர்
(c). உள்துறை அமைச்சர் (d). வெளியுறவு அமைச்சர்

20. சிவாஜியின் அமைச்சரவையில் 'அமத்தியா' என்பவர்

(a). நீதிபதி (b). சமயத் தலைவர்
(c). நிதி அமைச்சர் (d). இராணுவ அமைச்சர்

21. தமிழக அரசு சார்பில் கொடுக்கப்படும் புதிய விருதுகள் பற்றிய செய்திகளில் சரியானவற்றைத்தேர்க.

1. ஜி.யு. போப் விருது - அயல்மொழியில் தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கும் மொழி பெயர்ப்பாளருக்கு வழங்கப்படுவது
2. உமறுப் புலவர் விருது - தமிழுக்கும், தமிழ் இலக்கியத்திற்கும் தொண்டாற்றிவரும் தமிழ் அறிஞருக்கு வழங்கப்படுவது.
3. முதலமைச்சர் கணினித் தமிழ் விருது - கணினித் தமிழ் வளர்ச்சிக்காக சிறந்த தமிழ் மென்பொருளை உருவாக்குபவரை ஊக்குவிக்க வழங்கப்படுவது.

(a). 1, 2 (b). 2, 3 (c). அனைத்தும் சரி (d). அனைத்தும் தவறு

22. 1985-ஆம் ஆண்டு உருவாக்கப்படாத மாவட்டம்

(a). சிவகங்கை (b). திண்டுக்கல் (c). திருவண்ணாமலை (d). இராமநாதபுரம்

23. புத்தகங்களை 'காலத்தின் விதைநெல்' என்று கூறிய தமிழ் எழுத்தாளர்

(a). பாரதியார் (b). பாரதிதாசன் (c). அறிஞர் அண்ணா (d). அகிலன்

24. காப்பியின் தாயகம் என சிறப்பிக்கப்படும் நாடு?

(a). பிரேசில் (b). கானா (c). எத்தியோப்பியா (d). போர்ச்சுகல்

25. 'இரத்தக் கண்ணீர்' நாடகத்தைப் படைத்தவர்?

(a). கொத்தமங்கலம் சுப்பு (b). திருவாரூர் தங்கராசு
( c). எம்.ஆர். ராதா (d). அறிஞர் அண்ணா

26. உடலின் குளோரைடு சோடியம் அளவைக் கண்டறிய பயன்படும் சோதனை?

(a). ஸ்வெட் சோதனை (b). நார்த்தர்ன் பிளாட் சோதனை
(c). சதர்ன் பிளாட் சோதனை (d). வெஸ்டர்ன் பிளாட் சோதனை

27. இன்சுலினைச் சுரப்பது எது?

(a). கல்லீரல் (b). கணையம்
(c). சிறுநீரகம் (d). தைராய்டு

28. மாநிலங்களவை உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் ஓய்வு பெறுவது?

(a). ஒவ்வொரு ஆண்டிற்கு ஒரு முறை (b). இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை
(c). ஒவ்வொரு மூன்று ஆண்டிற்கு ஒரு முறை (d). ஒவ்வொரு நான்காண்டிற்கு ஒரு முறை

29. தமிழகத்தில் இந்திய தாவர கணக்கெடுப்பு மையம் எங்கு அமைந்துள்ளது?

(a). மதுரை (b). திருநெல்வேலி
(c). கோயம்புத்தூர் (d). சென்னை

30. இந்தியாவில், பெனிசிலின் மருந்து உற்பத்தி செய்யப்படும் இடம்?
(a). ஆல்வாய் (b). புனே (c). மைசூர் (d). பிம்ப்ரி

31. இந்தியாவின் வெளியுறவுக் கொள்கை?
(a). படைக்குறைப்பு (b). கூட்டுச்சேராமை
(c). அதிகாரச் சமநிலை (d). கூட்டுப்பாதுகாப்பு

32. இந்தியாவை விட்டு கடைசியாக வெளியேறிய ஐரோப்பியர்கள்?
(a). பிரெஞ்சுக்காரர்கள் (b). டச்சுக்காரர்கள்
(c). போர்ச்சுக்கீசியர்கள் (d). ஆங்கிலேயர்கள்

33. காதம்பரியை எழுதியவர் யார்?
(a). ஹர்ஷர் (b). பாணர்
(c). காளிதாசர் (d). ஜெயசேனர்

34. இந்திய குடியரசுத்தலைவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பவர் யார்?
(a). இந்திய தலைமை நீதிபதி
(b). இந்திய துணைக் குடியரசுத்தலைவர்
(c). சபாநாயகர்
(d). பிரதம அமைச்சர்

35. புத்தரின் முதல் போதனை இவ்விதம் அழைக்கப்படுகிறது?
(a). தர்ம சக்கர பரிவர்த்தனா
(b). ஆகம சித்தாந்தம்
(c). சித்த சீலம்
(d). கைவல்யம்

36. அங்காடி கட்டுப்பாட்டை அறிமுகப்படுத்தியவர்?
(a). ஜலாலுதீன் கில்ஜி (b). அலாவுதீன் கில்ஜி
(c). பால்பன் (d). கைகுபாத்

37. செங்கிஸ்கான் இந்தியா மீது படையெடுத்த போது டெல்லி சுல்தானாக இருந்தவர்?
(a). ருக்னுதீன் (b). இல்டுமிஷ்
(c). குத்புதின் ஐபெக் (d). இஸ்டிஸ்

38. 'உயிர் உரம்' என அழைக்கப்படுவது யாது?
(a). ரிசோபியம் (b). சவுக்கு
(c). அசாஸ் பைரில்லம் (d). சாணம்

39. இந்தியாவில் பிளவுபட்ட பள்ளத்தாக்கின் வழியே பாய்ந்து செல்லும் நதி எது?
(a). கோதாவரி (b). நர்மதை (c). கிருஷ்ணா (d). காவேரி

40. தவறான இணையைக் கண்டறிக?
(a). கல்லட்டி நீர்வீழ்ச்சி - நீலகிரி
(b). காந்தி ஆசிரமம் - திருச்செங்கோடு
(c). பாலிமர் ஆராய்ச்சி மையம் - ஸ்ரீவில்லிபுத்தூர்
(d). கோழிப்பண்ணை ஆய்வு மற்றும் மேம்பாட்டு மையம் - நாமக்கல்

41. தவறான இணையைத் தேர்ந்தெடு?

(a). காளிங்கராயன் அணைக்கட்டு - ஈரோடு

(b). குருவம்பட்டி உயிரியல் பூங்கா - சேலம்

(c). பருத்தி ஆராய்ச்சி மையம் - கோயம்புத்தூர்

(d). கோமுகி அணை - விழுப்புரம்

42. தூத்துக்குடி மாவட்டம் உருவாக்கப்பட்ட ஆண்டு?

(a). 1986 (b). 1997 (c). 1991 (d). 1995

43. 'சந்தக் கவிஞர்'

(a). அருணகிரிநாதர் (b). செய்குத்தம்பி பாவலர்

(c). தொண்டரடிப் பொடியாழ்வார் (d). சுத்தானந்த பாரதி

44. ரேடாரின் செயல்பாட்டுத் தத்துவம்?

(a). குறுக்கீட்டு விளைவு (b). விளிம்பு விளைவு

(c). தள விளைவு (d). எதிரொளிப்பு

45. பல் மருத்துவத் துறையில் பயன்படும் வாயு?

(a). நைட்ரஜன் ஆக்ஸைடு (b). ஆக்ஸிஜன்

(c). ஹைட்ரஜன் (d). கார்பன் டை ஆக்ஸைடு

46. சோடா பானம் தயாரிப்பதற்கு எந்த வாயு பயன்படுகிறது?

(a). கார்பன் மோனாக்சைடு (b). கார்பன் டை ஆக்சைடு

(c). குளோரின் (d). ஹைட்ரஜன்

47. எலக்ட்ரானின் நிறை?

(a). $9.08 \times 10^{28}$ Kg (b). $9.08 \times 10^{31}$ gm (c). $9.08 \times 10^{28}$ gm (d). $9.08 \times 10^{19}$ Kg

48. புரோட்டானின் நிறை?

(a). $1.673 \times 10^{27}$ gm (b). $1.673 \times 10^{37}$ Kg (c). $1.0073 \times 10^{27}$ gm (d). $1.6 \times 10^{27}$ gm

49. அணுவின் உட்கரு புரோட்டான்களைப் பெற்றுள்ளது என்று முதலில் கூறியவர்?

(a). கோல்ட்ஸ் மீன் (b). ஜே.ஜே. தாம்சன் (c). சாட்விக் (d). ரூதர் போர்ட்

50. இந்தியாவின் தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையர்?

(a). என்.கோபாலசாமி (b). நவீன் சாவ்லா (c). வி.எஸ். சம்பத் (d). நரேஷ் குப்தா

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 - c, | 2- a, | 3 – d, | 4 – b, | 5 – c, | 6 - d, | 7 – b, | 8 – c, | 9 – b, | 10 - c, |
| 11 - b, | 12 - c , | 13- d, | 14 – d, | 15 – c, | 16 – c, | 17 – a, | 18 – b, | 19 –d, | 20 – c, |
| 21 – c, | 22 – c, | 23 – b, | 24 – c, | 25 – b, | 26 – a, | 27 – b, | 28 – b, | 29 – c, | 30 – d , |
| 31 – b, | 32 – c, | 33 – b, | 34 – a, | 35 – a, | 36 – b, | 37 – b, | 38 – d, | 39 – b, | 40 – d, |
| 41 – c, | 42 – a, | 43 – a, | 44 – d, | 45 – a, | 46 – b, | 47 – b, | 48 – a, | 49 – d, | 50 – c, |